மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 68, திருமதி சியாமளா ; மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்.

68—

நெசவாளர்களுக்கு கொடுக்கப்பட்ட கடன் தள்ளுபடி.

*1142—திருமதி ரெ. சியாமளா :

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெசவாளர்களுக்கு கொடுக்கப்பட்ட கடன் ரூபாய் 10,000 தள்ளுபடி செய்யப்பட்டது முழுமையாக அமலாக்கப்பட வில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அறியும்

(ஆ) கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருடன், கலந்தாலோசித்து, நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ரெ. சியாமளா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியைச் சார்ந்த எட்டயபுரம், கடலூர் ஆகிய பகுதிகளில் உள்ள நெசவாளர் பெருமக்களுக்கு அந்தக் கடன் தள்ளுபடி முழுமையாக அமலாக்கப்படவில்லை. நமது ஒப்பற்றத் தலைவி மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அதைப் பரிவோடு பரிசிலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 30 சதவிகிதம்தான் 'நாபார்டு' பரிந்துரை வாயிலாக, கூட்டுறவு பதிவாளரிடமிருந்து நமக்கு ரூபாய் 96.01 இலட்சமாக கிடைத்திருக்கிறது. இதிலிருந்து தமிழகத்திலேயுள்ள 56,717 நெசவாளர்கள் கொண்ட 1,018 கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கிறது. மீதிப் பணம் வர வர விநியோகிக்கப்படும், தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ரெ. சியாமளா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாகவி பாரதி பிறந்த எட்டயபுரத்திலுள்ள மூன்றில் இரண்டு பங்கு நெசவாளர்களுக்குத்தான் அந்த சலுகை

அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சலுகையையும், அதாவது அவர்களின் அந்தப் பணத்தையும் ஸ்பெஷல் ஆபீசர்ஸ் அக்கவுண்ட்டில் போட்டுள்ளார்கள். நெசவாளர்களுக்கு அந்தச் சலுகை போய்ச் சேரவில்லை. அதை அரசு விரைவில் பரிசீலிக்குமா என்பதை மீண்டும் அரசிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுப் பதிவாளரோடு கலந்தாலோசித்து மானியம் வராத நெசவாளர்களுக்கு வருவதற்காக ஆவன செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 69, திரு. எஸ். நாகூர் மீரான், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்.

69—

கூட்டுறவு நூற்பாலை.

*1495—திரு. எஸ். நாகூர் மீரான்:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கடையநல்லூர் பகுதியில் அரசு கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது'

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இது போன்ற திட்டமே இல்லை. (சிரிப்பு).

திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்குலூர் தொகுதி மிகவும்பின்தங்கிய பகுதியாக இருப்பதாலும், அந்தப் பகுதியில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர்கள் நலிவடைந்த நிலையில் உள்ளதாலும், அவர்கள் வாழ்வில் ஒளியேற்ற, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில், இந்த கடையநல்லூர் தொகுதி மீது கருணை காட்டி, அரசு கூட்டுறவு நூற்பாலை அமைக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் கடையநல்லூர் பகுதிக்கு அருகாமையில், தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலை 50 ஆயிரம் கதிர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. 50 ஆயிரம் கதிர்கள் கொண்ட நூற்பாலை செயல்பட்டு வருகிறது. குறிப்பாக, தமிழகத்தில் ஏறத்தாழ 18 நூற்பாலைகள்